Most Rev. Dr. A. Neethinathan
Bishop of Chingleput

02.01.2023

அன்புள்ள அருள்பணியாளர்கள், அருள்சகோதரர்கள், அருள்சகோதரிகள். இறைமக்கள் அனைவருக்கும் அன்பு வணக்கங்கள்!

**நம்முடைய முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் 31.12.2022 அன்று தம் 95ஆம் அகவையில் நம் விண்ணகத் தந்தையின் இல்லத்திற்குப் பயணமாகி சென்றுள்ளதைக் கனத்த இதயத்துடன் நினைந்து வருந்துகின்றோம்.** "*என் இதயத்திற்கேற்ற மேய்ப்பர்களை உங்களுக்குக் கொடுப்பேன். அவர்கள் உங்களை அறிவுடனும் முன்மதியுடனும் வழிநடத்துவார்கள்*" (எரே 3:15) என்னும் இறைவாக்குக்கேற்ப, திருஅவையின் நெருக்கடியான காலத்தில் பேதுருவின் தலைமைப்பீடப் பொறுப்பில் இறைத் திருவுளத்தால் பணியமர்த்தப்பட்டு, பத்து ஆண்டுகளுக்குமுன் தன் உடல்நலக் குறைவு காரணமாக, திருஅவையின் பாரம்பரியத்தில் சற்று மாறுபட்டவராகப், பணி ஓய்வைத் தேடிக்கொண்ட திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட், தனக்கே உரிய ஆழ்நிலை அகவாழ்வு ஆன்மீகத்தில், மறைந்த தப செப வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களே பலமுறை சான்று பகர்ந்திருப்பதுபோன்று, கடந்த பத்து ஆண்டுகளாய் அவரது தலைமைப் பணிகளுக்கெல்லாம் பின்புல ஆன்மீக ஆற்றலாய் இருந்து வந்துள்ளார் நம் முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள்.

தான் உயிர்விடும் தருணத்தில், மிக மெல்லிய குரலில், ஆனால் தெளிவான தொனியில், இத்தாலிய மொழியில், "*ஆண்டவரே, நான் உம்மை அன்பு செய்கிறேன்*" என்று, திருஅவையின் திருதந்தையாக, நம் அனைவரின் அர்ப்பணமிக்க அன்பைத் தம் நிறைவுக் காணிக்கையாக்கிச் சென்றுள்ள அவரது அபூர்வ செயல் அவர்தம் போற்றுதற்குரிய அருள்வாழ்வுக்குச் சான்றாய் அமைகின்றதன்றோ!

05.01.2023 வியாழன் பிற்பகல் 2 மணிக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மறைந்த முன்னாள் திருத்தந்தைக்காக திருப்பலி ஒப்புக்கொடுத்து, அவர்தம் ஆன்மாவை இறைவனின் பேரிரக்கத்திற்கு ஒப்படைப்பார். பின், புனித பேதுருவின் கல்லறை அருகில், முன்னாள் திருத்தந்தையர்களின் துயிலிடத்தில் இவரும் நல்லடக்கம் செய்யப்படுவார். திருஅவையின் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தில், பணியிலுள்ள திருத்தந்தையே இறந்த முன்னாள் திருத்தந்தையை வழியனுப்பி வைத்து நல்லடக்கம் செய்யும் பேற்றினைப் பெற்ற முதல் திருத்தந்தை என்னும் சிறப்பிடத்தைப் பெற்றவராக திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் திகழ்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது இறுதிசடங்குகள் எளிமையாய் அமைய வேண்டும் என்ற தன் சுய விருப்பத்தை முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் பதிவு செய்திருந்தாலும், திருஅவையின் தலைமை நிலையிலிருந்து நம்மை வழிநடத்திய நம் திருத்தந்தைக்கு நம் அன்பையும் நன்றியையும் தெரிவிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

Catholic Bishop's House, Kancheepuram Road, Thimmavaram, Chengalpattu
Chengalpattu District - 603 101, Tamil Nadu, South India.
Email : chengaidiocese@yahoo.co.in ▪ bpneethi@gmail.com ▪ Phone : 044 - 274 26 649

Most Rev. Dr. A. Neethinathan
Bishop of Chingleput

எனவே, கீழ்கண்ட வழிகாட்டுதல்களை நம் மறைமாவட்ட மக்களுக்கு வழங்க விரும்புகிறேன்:

- இன்று முதல் முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களின் இறுதி நிகழ்வுகள் நடந்தேறும் 05.01.2023 அன்று வரை துக்க தினங்களாக நம் மறைமாவட்டம் முழுவதும் அனுசரிப்போம். எல்லாப் பொது நிகழ்வுகளையும் கலை நிகழ்வுகளையும், கொண்டாட்டங்களையும் தவிர்ப்போம் அல்லது தள்ளி வைத்துக்கொள்வோம். நம் ஆலய, பள்ளி மற்றும் நிறுவன வளாகங்களில் அஞ்சலி வரிகள் தாங்கிய பதாகைகள் வழியாக திருஅவை சந்தித்துள்ள இழப்பின் துயரத்தைச் சமூகத்திற்குப் பதிவு செய்வோம்.
- 05.01.2023 அன்று, எல்லா பங்கு ஆலயங்களிலும் உரோமை திருப்பலி நூலின் 1219 – 21 பக்கங்களில் காணப்படும் இறந்தோருக்கானத் திருப்பலியை நம் மக்களுடன் ஒப்புக்கொடுத்து, அவர்தம் ஆன்மாவிற்காக செபிப்போம்.
- 05.01.2023 அன்று ஆலய மணிகளை இடைவெளிவிட்டு ஒலிக்கச் செய்து, கிறிஸ்துவின் மறையுடலாம் திருஅவையின் துயரத்தில் உறுப்புகளாகிய அனைத்து இறைமக்களும் தங்களை இணைத்துக் கொள்ள உதவுவோம்.
- 05.01.2023 அன்று நடந்தேறும் அரிதாக நிகழக்கூடிய திருஅவை திருத்தந்தையின் அடக்கச் சடங்கினை மாதா தொலைக்காட்சி, EWTN, BBC போன்ற ஊடகங்கள் வழியாகக் கண்டு, அதில் பங்கேற்று செபித்து நம் கத்தோலிக்க உணர்வைக் கட்டியெழுப்பிக் கொள்வோம்.
- மிக முக்கியமாக, **11.01.2023 புதனன்று, காலை 11 மணிக்கு நம் மறைமாவட்டத்தின் சார்பில், மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில், அருள்பணியாளர்கள், துறவியர், இறைமக்கள் இணைந்து வந்து, மறைந்த நம் முன்னாள் திருத்தந்தைக்கு அஞ்சலி செலுத்தவும், அவரின் ஆன்மா இறைவனின் இரக்கத்தினால் நிலைத்த அமைதி பெற திருப்பலி ஒப்புக்கொடுக்கவும் அழைக்கின்றேன்.** மறைமாவட்ட மற்றும் துறவற அருள்பணியாளர்கள் அனைவருடன், துறவற சகோதரிகளின் இல்லப் பிரதிநிதிகளும், ஒவ்வொரு பங்கிலிருந்தும் இரண்டு பொதுநிலைப் பிரதிநிதிகளுமாக இந்நிகழ்வில் கலந்துக் கொள்வோம். மதிய உணவுக்கு ஏற்பாடு செய்யப்படும். மக்கள் தாங்கள் இருக்கும் இடங்களிலிருந்து பங்கேற்கும் வண்ணம், வலையொளி (யூடியூப்) நிகழ்நிலைக் காணொளிப் பகிர்வு மூலம் அன்றைய நிகழ்வுகள் வழங்கப்படும். அதற்குரிய இணைப்புக் குறி (லிங்க்) அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு, திருஅவைமீதும் திருத்தந்தைமீதும் நமக்குள்ள பற்றுதலை உறுதிப்படுத்திக் கொள்வோம்.

நிறைவாக, நாம் வாழும் இந்த காலக் கட்டத்தில், நாம் கண்ட திருத்தந்தையாக, ஆழ்ந்த ஆன்மீகமும், மிகுந்த அறிவாற்றலும், பன்முகப் பட்டறிவும் கொண்டவராய்த் திருஅவையின் தலைமை பொறுப்பேற்று, ஓய்வு கண்டவராய், நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றுச் செல்லும் நம் நல் மேய்ப்பருக்கு இறைவன் தன் நிலைவாழ்வின் சன்மானத்தைத் தந்திட அவருக்காக மன்றாடுவோம். அவரது ஆன்மா அமைதியில் இளைப்பாறக்கடவதாக!

+ [signature]

**+ மேதகு ஆயர் A நீதிநாதன்**
செங்கல்பட்டு மறைமாவட்டம்

MOST REV. DR. A. NEETHINATHAN BISHOP OF CHINGLEPUT

*குறிப்பு: உங்கள் பயன்பாட்டிலுள்ள ஊடக வாய்ப்புகள் வழியாக, இம்மடல் நம்பிக்கையாளர்கள் மத்தியில் பரவலாக்கப்படட்டும்.*

Catholic Bishop's House, Kancheepuram Road, Thimmavaram, Chengalpattu
Chengalpattu District - 603 101, Tamil Nadu, South India.
Email : chengaidiocese@yahoo.co.in ■ bpneethi@gmail.com ■ Phone : 044 - 274 26 649

Most Rev. Dr. A. Neethinathan
Bishop of Chingleput

02.01.2023

Dear Rev Fathers, Brothers and Sisters, and lay brethren,

**We remember and ruminate with immense sorrow the departure of our Pope Emeritus Benedict XVI to our Father's Home in his 95th year on 31.12.2022.** As per the prophetic attestation of Jer 3:15, "I will give you shepherds after my own heart, who will feed you with knowledge and understanding," Pope Emeritus Benedict XVI was chosen for the Petrine office by divine plan to guide the Church during crucial days of great challenges.

A decade ago, by opting to lay down his leadership role and retire to recluse, he gave a jolt and deviation to the course of Church's tradition of the past 600 years. This perfectly suited to his own self disposition to contemplative commitment and he immersed himself in a life of profound silence and solitude within the precincts of Vatican. As often referred to by Pope Francis himself, Pope Emeritus Benedict XVI has been the backing spiritual energy for all the administrative ventures of Pope Francis through his silent but vibrant presence and prayerful accompaniment.

In the final hours of his earthly itinerary, the rare articulation of Pope Emeritus Benedict XVI, in a slender voice but in clear diction, in Italian, "Lord, I love you," thus, making his final submission to the Lord, as the Pontiff of the Church, on behalf of us all, is a shining witness of his exceptionally deep-rooted spirituality!

On Thursday, 05.01.2023, Pope Francis will officiate the Funeral Holy Eucharist for his fond predecessor and uplift the final commendation to the infinite mercies of the Lord who had elevated him to the helms of the Church. Pope Emeritus Benedict XVI will be laid to rest along with the former Popes in the close vicinity of St Peter's tomb in Vatican. He will be recognized in history as the first Pope who has been blessed to be buried by another Pope in office.

Though Pope Emeritus Benedict XVI has expressly given vent to his heart's desire that his funeral events should be solemn, but socially simple and sober, we owe to express our affection and gratitude to him who has shepherded us all from the Chair of St Peter.

Catholic Bishop's House, Kancheepuram Road, Thimmavaram, Chengalpattu
Chengalpattu District - 603 101, Tamil Nadu, South India.
Email : chengaidiocese@yahoo.co.in ▪ bpneethi@gmail.com ▪ Phone : 044 - 274 26 649

Most Rev. Dr. A. Neethinathan
Bishop of Chingleput

I wish therefore to give to our diocese the following guidelines:

- We shall observe a time of mourning from the moment you receive this communication till the day of the funeral on 05.01.2023. We shall either cancel or postpone all public events, cultural program and common celebrations. We shall place banners in our church, school and institution premises, sending messages to the public about the saddening loss that the church is going through.
- On 05.01.2023, we shall offer the Mass meant for the deceased Popes as found in the Tamil Roman Missal on pages 1219-21, and pray with the people for the repose of the soul of the departed Pontiff.
- We shall toll the church bells intermittently on the day of the funeral to ensure the solidarity of the faithful in the painful moment of the Mystical Body of Christ, the universal church.
- We shall encourage our people to watch the solemn funeral rites on 05.01.2023 from around 2 pm through the media channels like, Madha TV, EWTN and BBC, and participate spiritually and virtually in this historic ecclesial event and foster among us our Catholic bond.
- **Importantly, I wish to invite you to join me on Wednesday, 11.01.2023, at 11 am in our Pastoral Centre, to pay our homage and respects to our departed Pope Emeritus Benedict XVI, and offer the Holy Eucharist on behalf of the diocese for the repose of his soul.** Specifically, we expect all the diocesan and religious priests along with the representatives of women religious communities and two lay representatives from each parish. Lunch is being organized. To make available the events to our people in their own places on YouTube channels, arrangements are made to live stream them and the links will be circulated then. Thus, we shall express our love for the Church and for the Pope placed at the head of it.

Finally, I solicit the prayers of all of you for Pope Emeritus Benedict XVI, the Roman Pontiff of our times, the Pope we have seen to lead, retire and repose, the Pontiff who was an exceptional giant of spiritual depth, intellectual heights and multifarious exposures and experiences, as he bids us farewell and proceeds for his eternal rewards. May his soul rest in peace!

**+ Most Rev Dr A Neethinathan**
Bishop of Chingleput

***Note:*** *Let this circular be disseminated far and wide among the faithful through available local and parochial media possibilities.*

Catholic Bishop's House, Kancheepuram Road, Thimmavaram, Chengalpattu
Chengalpattu District - 603 101, Tamil Nadu, South India.
Email : chengaidiocese@yahoo.co.in ▪ bpneethi@gmail.com ▪ Phone : 044 - 274 26 649